சேந்தமங்கலம் தொகுதியில் ‘சிப்காட்’ தொழிற்பேட்டை அமைத்ததற்கு நன்றி!

# சிறுதானிய பல்பொருள் அங்காடி - பழங்குடியின மகளிர் தொழிற் பூங்கா!

## சட்டப்பேரவையில் - சேந்தமங்கலம் கே. பொன்னுசாமி பேச்சு!



**சென்னை, மே. 1 - சட்டப்பேரவையில் நிதி, சுற்றுச் சூழல், ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையில், சேந்த மங்கலம் தொகுதி உறுப்பினர் கே. பொன்னுசாமி பேசுகையில் சேந்த மங்கலம் தொகுதியில் சிப்காட் தொழிற் பூங்கா அமைத்ததற்கு நன்றி தெரிவித்து பேசினார்.**

சட்டப் பேரவையில் சேந்தமங்கலம் தொகுதி கே.பொன்னுசாமி பேசியதாவது:-

2025-2026 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவை தலைவர் அவர்களுக்கு வணக்கம். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திசை நோக்கி நான் வணங்குகிறேன். தமிழகத்திலே பிறந்து, தமிழகத்திலே வளர்ந்து, தமிழ் மொழிக்காக, தமிழ்நாட்டு மக்களுக்காக வாழ்ந்து, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்த, மகளிருக்காக பல்வேறு திட்டங்களான, மகளிர் சுய உதவிக் குழு ஆரம்பித்த, பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கிய, பெண்களுக்கு சொத்தில் சம உரிமையை பெற்று தந்த, பெண்களுக்கு உள்ளாட்சியில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கிய, கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திசை நோக்கி நான் வணங்குகிறேன்.

**ஓரி மன்னனுக்கு கொல்லி மலையில் சிலை!**

இந்தியாவே திரும்பி பார்க்கின்ற அளவிற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சிறப்பான திராவிட மாடல் ஆட்சி நடத்தி கொண்டிருக்கின்ற, குறிப்பாக, பெண் இனத்திற்காக மகத்தான சாதனைகளான, விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை, புதுமை பெண் திட்டம் போன்றவற்றை ஏழை மக்களுக்கு வழங்கிய முதலமைச்சர் அவர்களை நான் வணங்குகிறேன்.

கொல்லிமலையை ஆட்சி செய்தவன் வல்வில் ஓரி மன்னன். அவன் அம்பு எய்துவதில் மிகச் சிறந்த வில்லாளி. ஒரே அம்பில் ஏழு மிருகங்களை யெல்லாம் அடித்துக் கொன்றிருக்கிறார் வல்வில் ஓரி மன்னன். முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள்தான், கொல்லிமலையில் அந்த மன்னனுடைய சிலையை 1975 ஆம் ஆண்டு திறந்து வைத்தார். கடையேழு வள்ளல்களில் ஒருவராகத் திகழ்ந்து கொண்டிருந்தவர் தான் வல்வில் ஓரி மன்னன். ஆனால், தற்போது எட்டாவது வள்ளலாக திகழ்ந்து கொண்டிருக்கின்றார் முதல்வர் அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். முதல்வர் அவர்கள், இன்று இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற அளவிற்கு சிறப்பான திட்டங்களை யெல்லாம் செயல்படுத்தி வருகின்றார்கள் என்பதை பணிவன்போடு இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

எதிர்காலத்தில் இந்த இயக்கத்தை வழிநடத்தவிருப்பவர், இளைஞர்களின் வழிகாட்டி, ஓய்வறியா உழைப்பாளி, உடன்பிறப்பே என்ற ஒற்றை மந்திரச் சொல்லால் மக்களை கட்டிப்போட்ட முத்த மிழறிஞர் வவகலைஞர் அவர்களைப் போன்று ஒற்றைச் செங்கலால் மக்களின் மனங்களை வென்ற நம் இளைஞரணிச் செயலாளர், தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்களை நான் வணங்குகிறேன்.

நீர்வளத் துறை அமைச்சர் அவை முன்னவர் அவர்களையும் வணங்குகிறேன். பேரவைத் துணை தலைவர் அவர்களையும், அரசுக் கொறடா அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும், மாநிலங்களவை உறுப்பினர் எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் ராஜேஷ்குமார் அவர்களையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் நான் வணங்குகிறேன். இரண்டாவது முறையாக எனது வெற்றிக்காக உழைத்த ஒன்றிய கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், கூட்டணிக் கட்சி நிர்வா கிகள், கழகத்தினுடைய மூத்த முன்னோடிகள் மற்றும் சேந்தமங்கலம் சட்ட மன்றத் தொகுதி வாக்காளர்கள் ஆகியோருக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் அவர்கள், கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தொகுதியில் செய்திருக்கிற திட்டங்கள் பற்றி நான் பட்டியலிட விரும்புகிறேன். எனது சேந்தமங்கலம் தொகுதியில் முதன்முதலில் சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தது, விளையாட்டுத் திடல் அமைத்தது, எருமப்பட்டி மற்றும் சேந்தமங்கலம் ஆகிய இரண்டு ஒன்றியங்களிலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் ரூ.358 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் வழங்கியது,

நாமக்கல் முதல் தொட்டியம் வரை இருவழிச் சாலையாக அமைத்தது, நாமக்கல் முதல் தாத்தையங்கார்பேட்டை வரை இருவழிச் சாலையாக அமைத்தது, கொல்லிமலைக்கு செல்லும் 70 கொண்டை ஊசி வளைவுகளை அகலப்படுத்தியது, கொல்லிமலையிலுள்ள 14 ஊராட்சிகளிலும் cell phone tower அமைத்தது, கொல்லிமலையிலுள்ள 14 ஊராட்சிகளிலுள்ள பழங்குடியின மக்களுக்கு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு 600 கலைஞர் கனவு இல்லம் வீடுகள் வழங்கப்பட்டது.

**மிளகுக்கு புவிசார் குறியீடு**

கொல்லிமலையில் உள்ள மிளகு வாழ்வாதாரமாக விளங்கி கொண்டிருக்கிறது. அதற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது. அதன் பயனாகத்தான் இன்றைக்குக்கூட கொல்லிமலையில் தற்போதைய மார்க்கெட் நிலவரப்படி ஒரு கிலோ மிளகு 700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் ஒரு கிலோ மிளகு சுமார் 300 ரூபாய், 350 ரூபாய் என்றுதான் விற்பனை செய்யப்பட்டது. அந்த மிளகுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்ட பிறகு, நம்முடைய ஆட்சியில்நிரந்தரமாக ஒருகிலோ மிளகின் விலை 700 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதேபோன்று, தலைமலைப் பெருமாள் கோயிலுக்கு கிரிவலப் பாதை அமைக்கப்பட்டது. காரவள்ளி முதல் கொல்லி மலை வரை செல்லும் மின்சாரக் கம்பிகளை கேபிள் வயராக மாற்றியமைக்கப்பட்டது ஆகியவையாகும்.

பழங்குடியின மக்களின் கோரிக்கை. சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் பழங்குடியின மலைவாழ் மக்கள் அதிகளவில் வசித்து வருகிறார்கள். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்விதமாக மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்க பழங்குடியினர் துணை ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு பகுதியிலுள்ள பழங்குடியின மாணவ மாணவிகளின் உயர் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கவும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளின் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்த புதியதாக அரசு பழங்குடியினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டும்.

பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் விளையும் சிறுவன மகசூல் மற்றும் சிறுதானிய பொருட்களை விற்பனை செய்யும் வகையில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் சுற்றுலா இடங்களில் சிறு வன மகசூல் சிறுதானிய பல்பொருள் அங்காடி மற்றும் புதியதாக பழங்குடியின மகளிர் தொழிற்பூங்கா தொடங்கப்பட வேண்டும். பழங்குடியின பட்டியலில் பிற இனத்தவரை சேர்ப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

**தாட்கோ மூலம் கடனுதவி**

பழங்குடியின மக்களின் நிலங்களை, பழங்குடி அல்லாதவர்களின் பெயரில் பட்டா மாற்றம், பத்திரப் பதிவு செய்து வருவதை தடை செய்ய வேண்டும். அரசு ஏற்கெனவே அமல்படுத்தியுள்ள வருவாய்த் துறை நிலை ஆணை எண் 15/40 அரசாணையை அனைத்து சார் பதிவாளர் அலுவலகத்திலும் அறிவிப்பு பலகையாக வைத்து அமல்படுத்த வேண்டும்.

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்திற்காக அண்டை மாநிலங்களுக்கு இடம் பெயர்கிறார்கள். இதனால் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி மாணவ-மாணவியர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, அம்மக்களின் வாழ்வாதாரத்தை கருதி தாட்கோமூலம் வழங்கப்படும் கடன் உதவி அல்லாமல், தனிநபர் கடனுதவி வழங்கி, பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை கண்காணிக்க குழு ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன் பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் 1 சதவிகித இட ஒதுக்கீட்டை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் வழங்கினார். ஆனால், வேலைவாய்ப்பிலும் 50க்கும் குறைவான பணியாளர்களை அறிவிக்கும்போது, பழங்குடியின மக்களுக்கு அப்பணிகளில் வாய்ப்பு கிடைக்காமல் போகிறது.

ஆதலால், 50க்கும் குறைவான வேலைவாய்ப்பு வழங்கும்போதும், 1 சதவிகித இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டுமென்று என் பதை முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்கிறேன்.

மலைப் பகுதிகளில் தரிசு நிலங்களில் பயிர் செய்யும் பழங்குடியின மக்களுக்கு அரசாணை எண் 1168லிருந்து விலக்கு அளித்து பட்டா வழங்க வேண்டும். பழங்குடியின மக்களுக்கான இட ஒதுக்கீட்டை அனைத்து துறைகளிலும் முறையாக பின்பற்றப்பட வேண்டும். பழங்குடியினர் நலத் துறை தனி முதன்மைச் செயலாளருடன் தனித் துறையாகச் செயல்படுத்தி, நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள 23 லேம்ப் கூட்டுறவுச் சங்கங்களை பழங்குடியினர் நலத் துறை கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும். இதனால் பழங்குடியின மக்கள் பெற்ற திட்டங்களின் மானியத் தொகையை அச்சங்கங்களுக்கு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.. பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாதந்தோறும் ஆய்வுக்குச் செல்ல வேண்டும். அப்படி ஆய்வுக்குச் செல்கின்றபொழுது, மாவட்ட வன அலுவலர் அவர்களையும் ஆய்வுக்கு அழைத்து செல்ல வேண்டும். இதனால். பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்; அவர்களுடைய பிரச்சனைகள் தீர்வு காணப்படும் மற்றும் திட்டங்கள் வகுக்க வழிவகை செய்யப்படும். பழங்குடியின நலப் பள்ளிகளில் ஆசிரியர்களின் வருகை பதிவேடு உறுதி செய்யப்பட வேண்டும். வன உரிமை சட்டம், 2006 ன்படி மேய்ச்சல் நில உரிமை பழங்குடி மக்களுக்கு உள்ளது. எனவே, வனங்களில் ஆடு, மாடுகளை மேய்க்கக் கூடாது என்ற சென்னை உயர் நீதிமன்ற உத்திரவில் தமிழக அரசு தலையீடு செய்து, மேய்ச்சல் உரிமையை பழங்குடி மக்களுக்கு பெற்றுத் தரவேண்டும். வனங்களை சார்ந்துள்ள அனைத்து கிராமங்களுக்கும் உடனடியாக சமூக வன வள உரிமையை வழங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) வன உரிமை சட்டம், 2006 ன்படி பழங்குடி மக்கள் வாழும் அனைத்து மலைகளிலும், மலை சார்ந்த பகுதிகளிலும் வன உரிமை குழுக்களை வெளிப்படைத் தன்மையோடு அனைத்து கிராமங்களிலும் ஏற்படுத்துதல் வேண்டும்.

**பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும். இன்னும் 5 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள்.

**கே. பொன்னுசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பத்து இலட்சத்துக்கு மேல் பழங்குடி மக்கள், மலை மற்றும் தரை பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மலைப் பகுதிகளில் வாழ்வாதா ரத்திற்காக வனம் தரிசு மற்றும் விவசாய பட்டா நிலங்களை சார்ந்து வாழ்கின்றனர்.

மேலும், மலைப் பகுதிகளில் 50,000க்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் அரசு தரிசு நிலங்களில் பயிர் செய்து வருகின்றனர். அவர்களுக்கு பட்டா பெற முடியாமல் அரசாணை 1168/வ.து., நாள் 25 71989 தடுக்கிறது. எனவே, இந்த அரசாணையை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும். தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் 10 இலட்சத்திற்கு மேல் உள்ளனர். இம்மக்கள் சமுதாய வளர்ச்சியடைய மக்கள்தொகையின் அடிப்படையில் சட்டமன்றப் பேரவையில் நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். பழங்குடி மக்கள் வசிக்கும் அனைத்து பகுதிகளிலும் மலைப் பகுதிகளில் உள்ளதுபோல் அரசு ஏகலை மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியை உருவாக்க வேண்டும். சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியினுடைய கோரிக்கைகள்.

கொல்லிமலை பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

**பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள். (குறுக்கீடு) நன்றி. தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் பதிவு செய்து கொள்கிறோம். ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லுங்கள். மற்றவற்றை பதிவு செய்து கொள்கிறோம்..

சேந்தமங்கலம் கலைக் கல்லூரிக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயர் சூட்டப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் மலைவாழ் மக்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர். அப்பகுதியிலுள்ள 22 ஊராட்சி மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டியிருப்பதால் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கே.பொன்னுசாமி பேசினார்.

---

வைகை ஆற்றின் குறுக்கே மந்தி வலசையில் மேம்பாலம் கட்டியதற்கு நன்றி!

# பரமக்குடி நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்துக!

## சட்டப் பேரவையில் பரமக்குடி செ.முருகேசன் பேச்சு!



**சென்னை, மே 1 - சட்டப் பேரவையில் நிதி, சுற்றுச் சூழல், ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பரமக்குடி தொகுதி உறுப்பினர் செ.முருகேசன் பேசுகையில் பரமக்குடி நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தார்.**

**சட்டப் பேரவையில் சட்டமன்றம், ஆளுநர் நிதி, சுற்றுச்சூழல் ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையில் பரமக்குடி செ.முருகேசன் பேசியதாவது:**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் மக்களுக்கான நல்லாட்சியை நடத்திவரும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும். . .

அவை முன்னவர் அவர்களுக்கும், அரசு தலைமை கொறடா அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களது மாவட்ட கழகச் செயலாளர், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினருமான அருமை காதர் பாட்சா முத்துராமலிங்கம் அவர்களுக்கும்,

சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நீதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் எனக்கு பேச வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இமானுவேல் சேகரனார்க்கு மணி மண்டபம்!**

பட்டியலின மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்விற்காக போராடி தன் உயிரையும் தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடியில் 3 கோடி ரூபாயில் மணி மண்டபம் அமைத்து அவர்களின் பிறந்த நாள் அரசு விழாவாக அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுடைய முழு உருவ வெண்கல சிலையுடன்கூடிய மணி மண்டபம் அமைத்து தந்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், தேவேந்திரகுல வேளாளர் மக்களின் சார்பிலும் கோடான கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவிடம் அமைந்துள்ள பசும்பொன் கிராமத்திற்கு போக்குவரத்து நெரிசலே இல்லாமல் வந்து செல்வதற்கு பல பொது மக்களின் நலன் கருதி பார்த்திபனூரில் புறவழிச்சாலை அமைத்துத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்தி வரும் திராவிட மாடல் அரசு நான்கு ஆண்டுகளில், பரமக்குடி தொகுதிக்கு வைகை ஆற்றின் குறுக்கே மந்திவலசை பகுதியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் புதிய மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பரமக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அதிநவீன வசதிகளுடன்கூடிய கூடுதல் மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

அதேபோல், பரமக்குடி நகராட்சிக்கு சந்தைக் கடை பகுதியில் புதிதாக வணிக வளாகக் கட்டடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நெசவாளர்களின் நலன் கருதி கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பில் பரமக்குடியில் புதிய ஜவுளிப் பூங்கா அமைக்க பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை எனது பரமக்குடி தொகுதிக்கு தந்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், எனது பரமக்குடி தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்!**

வீடு இல்லாமல் விளிம்பு நிலையில் வாழும் ஆதி திராவிட மக்களின் நலன் கருதி ஆதி திராவிடர் வீட்டுவசதி கழகம் ஆரம்பித்து, concrete வீடு கட்டித் தந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். சாதி மத பேதங்களை ஒழித்த தந்தை பெரியார் அவர்களின் பெயரில் அனைத்து மதத்தினரும், அனைத்து சாதியினரும் அருகருகே வசிக்கும் வகையில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கித் தந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். ஏழை மக்கள் முன்னேற வேண்டுமென்பதற்காக ஆதி திராவிட நலத் துறை சார்பில் கறவை மாடுகள், ஆடுகள் வழங்கி, அவர்கள் வாழ்வில் முன்னேற வழிகாட்டியாக இருந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அதேபோல், முதலமைச்சர் அவர்களும் ஏழை ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் தங்கள் வாழ்வில் முன்னேற கல்வி ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக பட்டப்படிப்பு முதல் மருத்துவ மேற்படிப்பு வரை படிக்க கல்வி கடன் வழங்கி, மாணவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றியுள்ளார்கள்.

அதேபோல், பட்டப்படிப்பு படித்த ஆதி திராவிட இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் தொழில் முனைவோர்களாக உருவாக TAHDCOமூலம் மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் பட்டப்படிப்பு படித்த ஆதி திராவிட இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை ஆதி திராவிட மக்களுக்கு மட்டுமே அல்லது அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் திராவிட மாடல் அரசை நமது முதலமைச்சர் அவர்கள் வழிநடத்தி வருகிறார்கள்.

**பாதாளச் சாக்கடை திட்டம்!**

பரமக்குடி நகராட்சி அதிக மக்கள்தொகை கொண்ட நகராட்சியாகும். இதனால் பரமக்குடி நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்துத் தர முதலமைச்சர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி நகராட்சி, முதல்நிலை நகராட்சியாக உள்ளது. அதை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தித் தருமாறு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி தொகுதி, பரமக்குடி காக்காதோப்பு முதல் எமனேஸ்வரம் வரை வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத்தர முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பரமக்குடி பகுதியில் காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படுகின்றது. இதனால், பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவ மாணவியர்கள், அலுவலகங்களுக்கு செல்லும் ஊழியர்கள், பொது மக்கள் ஆகியோர் சிரமப்படுகின்றனர். அங்கே போக்குவரத்து நெரிசல் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொது மக்களின் நலன் கருதி, பரமக்குடி நகரின் அருகே உள்ள எஸ். அண்டக்குடி ஊராட்சியில் நவீன வசதிகளுடன் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தருமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாமன்றத்தில் எனக்கு பேச வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய வெற்றிக்காக பாடுபட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகி களுக்கும், தொண்டர்களுக்கும், என்னை வெற்றிபெற செய்த பரமக்குடி சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் எனது நன்றியினை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு செ. முருகேசன் பேசினார்.

---

விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி

# அங்கன்வாடி கட்டிடங்கள் புதியதாக கட்டப்படுமா?

## சட்டப் பேரவையில் விளாத்திகுளம் ஜி.வி.மார்க்கண்டேயன் கேள்வி!



**சென்னை, மே. 1- சட்டப் பேரவையில் விளாத்திகுளம் தொகுதி உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் கேட்ட கேள்வியும் அமைச்சர் பி.கீதாஜீவன் அளித்த பதிலும் வருமாறு:-**

**ஜி.வி. மார்க்கண்டேயன்:** விளாத்திகுளம் சட்டப் பேரவைத் தொகுதி 148 கிராம ஊராட்சிகளைக் கொண்ட பகுதியாகும். ஏறக்குறைய 400 குக்கிராமங்கள் இருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட அங்கன்வாடிக் கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் கொடுக்கப்பட்டதைப் போன்று, அன்பழகனார் சிறப்புக் கல்வி வளாகத்தைப் போன்று சிறப்பு நிதியைப் பெற்று, இந்த அங்கன்வாடிக் கட்டடங்களை யெல்லாம் புதிய கட்டடங்களாக சீரமைத்துத் தருவாரா ?

**அமைச்சர் பி.கீதா ஜீவன்:** இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் காமராஜ் அவர்கள் கூறியதைப் போன்று நன்னிலம் பேரூராட்சிக்கு நகர் பகுதிக்கு உத்தரவிட்டதைப் போலவே 15-3-2024 அன்று ஊரக வளர்ச்சித் துறையிலிருந்தும் அந்த உத்தரவு பிறப்பிக்க ப்பட்டுள்ளது. ஆகவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் G.V. மார்க்கண்டேயன் அவர்கள் அந்த பராமரிக்க வேண்டிய பட்டியலெல்லாம் அந்த உரிய ஒன்றிய அலுவலகத்திற்கு கொடுக்கும்போது, கல்வி நிதி, மாநில நிதி ஆணைய நிதி, 15-வது நிதி ஆணைய நிதி மற்றும் பொது நிதியி லிருந்து செய்வதற்கு சிறப்பு உத்தரவு பிறப்பிக்க ப்பட்டுள்ளது. அரசு அதை கட்டாயம் செய்யவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு முன்னுரிமை வழங்க உத்தரவிட்டார்கள் என்பதை பேரவைத்தலைவர் அவர்களின் வாயிலாக நான் கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

தண்டராம்பட்டு வேம்பரப்பட்டிக்கு – பழங்குடியினர் பல்நோக்கு

# கூட்டுறவு சங்கத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படுமா?

## சட்டப் பேரவையில் செங்கம் மு.பெ.கிரி கேள்வி!



**சென்னை, மே 1 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது செங்கம் தொகுதி உறுப்பினர் மு.பெ.கிரி கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் அளித்த பதிலும் வருமாறு:**

**மு.பெ. கிரி:** செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தண்டராம்பட்டு ஒன்றியத்தில், வேம்பரப்பட்டிக்கு பழங்குடியி னர் பல்நோக்கு கூட்டுறவு சங்கம், கடந்த நிதியாண்டில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். அதற்கு இரண்டு ஆண்டு காலமாக புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது மலை அடிவாரத்தில் இருப்பதால், இந்த நிதி ஆண்டிலேயே கட்டடம் கட்டுவதற்கான நிதியை ஒதுக்கித் தருவாரா?

**அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன்:** இந்தக் கோரிக்கையை அவருடைய பொறுப்பு அமைச்சர் அவர்கள் மூலமாக ஏற்கெனவே வைத்திருக்கி றார்கள். அது தற்போது பரிசீலனையில் இருக்கிறது. நிச்சயமாக இந்த நிதியாண்டில் செய்து தரப்படும் என்ற உறுதியைத் தருகிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.